பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 31 | சனிக்கிழமை | 16.11.2024 | அதிர்வு 106

## தோள் கொடுத்த சகலருக்கும் நன்றி

**ஜனாதிபதி தெரிவிப்பு**



மறுமலர்ச்சி யுகத்தை ஆரம்பிக்கத் தோள் கொடுத்த அனைவருக்கும் நன்றி என்று ஜனாதிபதி அநுரகுமார 05

# தமிழ்த் தேசியக் கட்சிகளை மீண்டும் ஒன்றுபடுத்த முயற்சி

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் தீவிரம் அதன் தலைவர் சிவகரன் நேற்று அறிவிப்பு

எதிர்வரும் நாள்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட இருப்பதாகத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு தமது உத்தேச முயற்சி பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். 05



# பிரபல தமிழ் அரசியல்வாதிகள் இம்முறை தேர்தலில் தோல்வி!




இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களுடைய ஆசனங்களை இழந்துள்ளனர். 07




லண்டனில் இருந்து தமிழரசுக் கட்சியின் பற்றாளர் ஒருவர் அழைப்பு எடுத்தார். என்னிலும் விட வயதில் மூத்தவர்.

சுமந்திரனின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்காது என்பதில் அவருக்கு ரொம்பவும் வருத்தம். சுமந்திரன் நாடாளுமன்றம் செல்ல வாய்ப்பு இல்லையா என்றார் என்னிடம். இல்லை என்றேன் நான். அவர் மனம் நொந்தார்.

"அநுர அரசு புதிய அரசமைப்பைக் கொண்டு வரப் போகின்றது. அது உறுதி. அதை எதிர்கொண்டு தமிழருக்கு ஏற்ற வகையில் நேர் சீர் செய்வதற்கு சரியோ, பிழையோ சுமந்திரன் நாடாளுமன்றத்தில் அவசியம். மிக மிக அவசியம்." – என்றார் அவர்.

"விளங்குகின்றது. ஆனால் அதற்குத்தான் வாய்ப்பு இல்லையே. தனது மாவட்டத்தில் தேர்தலில் நின்று தோற்று விட்டு, தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக மாட்டேன் என்று அவர் (சுமந்திரன்) ஒற்றைக் காலில் உறுதியாக 05



# பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 59,92,348 பேர் வாக்களிக்கவில்லை

2024 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்புக்கமைய பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு 17,140,354 பேர் வாக்களிக்க தகுதிப் பெற்றிருந்த நிலையில், 11,148,006 பேர் வாக்களித்துள்ளதுடன், 5,992,348 பேர் வாக்களிக்கவில்லை. இம்முறை நாடளாவிய ரீதியில் 65 சதவீதமான வாக்குகளே பதிவாகியுள்ளன.

பத்தாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் வியாழக்கிழமை நாடளாவிய 13,421 வாக்களிப்பு மத்திய நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்புக்கமைய பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு 17,140,354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் நாடளாவிய ரீதியில் 11,148,006 பேர் வாக்களித்திருந்தனர்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 667,640 வாக்குகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் 11,815,246 வாக்குகள் செல்லுபடியான வாக்குகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் 5,992,348 பேர் வாக்களிக்கவில்லை.

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 3,820,738 பேர் வாக்களிக்கவில்லை. 2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்புக்கமைய வாக்களிப்பதற்கு 17,140,354 பேர் வாக்களிக்க தகுதிப் பெற்றிருந்த நிலையில், 13,319,616 பேர் வாக்களித்திருந்தனர். அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 300,300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டு, 13,619,916 செல்லுபடியான வாக்குகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

# தேர்தல் பெறுபேறுகள் இன ஒற்றுமையினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது

## சமன் வித்தியாரத்ன தெரிவிப்பு




இன ஐக்கியத்தை வெளிப்படுத்தும் வகையில் தேர்தல் பெறுபேறுகள் அமைந்துள்ளதுடன் யாழ்ப்பாணத்தில் எமக்கு கிடைத்த வெற்றி பெரு வெற்றியாகும் என பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் அதி கூடிய விருப்பு வாக்குகளை பெற்று தெரிவான சமன் வித்தியாரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

”வெளிவந்துள்ள நாடாளுமன்ற தேர்தல் பெறுபேறுகளின் மூலம் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாடு மற்றும் ஒற்றுமையை காணக்கூடியதாக இருக்கிறது. இது அதி விசேட வெற்றியாகும்.

பதுளையில் நான் பெற்ற வாக்குகளை விட யாழ்ப்பாணத்தில் எமக்கு கிடைத்த வெற்றி பெரு வெற்றியாகவே நான் பார்க்கிறேன். இந்த பெறுபேறு யாழ்ப்பாண அரசியல் வாதிகளுக்கும் சிறந்த பாடமாகும்.”– என்றார்.

# 165 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோயினுடன் 6 சந்தேகநபர்கள் சிக்கினர்!



கடற்படையினரால் மேற்கு கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் பெறுமதி 165 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்றும், இது குறித்த மேலதிக விசாரணைகள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்படையினரால் இலங்கையின் மேற்கு திசையின் ஆழ் கடலில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது, 165 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஹெரோயினுடன் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி சந்தேகநபர்கள் ஹெரோயின் கடத்தலுக்குப் பயன்படுத்திய பல நாள் மீன்பிடிப் படகுடன் நேற்று வெள்ளிக்கிழமை காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

காலி துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்ட படகு மேலதிக சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதே அதிலிருந்து 165 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 66 கிலோ 840 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 18 - 34 வயதுக்கு உட்பட்ட மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் கைப்பற்றப்பட்ட படகு மற்றும் போதைப்பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# 19 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் தாய்லாந்து பெண் ஒருவர் விமான நிலையத்தில் கைது!



19 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் தாய்லாந்து பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

37 வயதுடைய தாய்லாந்து பெண்ணே கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்திலிருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 11.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

பின்னர் சந்தேகநபர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேகநபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 22 கிலோ நிறையுடைய குஷ் மற்றும் ஹாஷ் ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.




# கொழும்பு மாவட்டத்தில் பிரதமர் ஹரிணிக்கு அதிகூடிய வாக்குகள்!

2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய 655,289 விருப்பு வாக்குகளைப் பெற்று கொழும்பு மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இந்த எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் இதுவரை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு வேட்பாளர் பெற்ற அதிகூடிய வாக்குகளாகும்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தியின் சத்துரங்க அபேசிங்க 127,166 வாக்குகள், சுனில் வட்டகல 125,700 வாக்குகள் மற்றும் லக்ஸ்மன் நிபுண ஆரச்சி 96,273 வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட சஜித் பிரேமதாச 145, 611 வாக்குகள், ஹர்ஷ டி சில்வா 81,473 வாக்குகள் மற்றும் முஜிபுர் ரஹ்மான் 43, 737 வாக்குகளைப் பெற்றுள்ளனர்.




# விகிதாசார தேர்தல்களின் கீழ் இது ஒரு வரலாற்று வெற்றி

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

விகிதாசாரத் தேர்தலின் கீழ் இது ஒரு வரலாற்று வெற்றி எனத் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெற்றியின் அரசியல் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், வெற்றிக்காகத் தியாகம் செய்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாறாத வடமாகாண மக்கள், இனவாதத்தைப் புறந்தள்ளி எமக்கு வாக்களித்தமைக்கு விசேடமாக நன்றி தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றி முன்னேறிச் சென்றுள்ளனர்.

மக்கள் வழங்கிய அதிகாரத்தில், மூன்றில் இரண்டு பங்கு நாங்கள் கேட்காத போது, அது எமக்கு வழங்கப்பட்டதாகவும், மக்கள் வழங்கிய பெரும்பான்மையான அதிகாரத்தை மக்களின் நன்மைக்காக அர்ப்பணித்து மக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்போம் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிற்கின்றார். இனி அதற்கு வாய்ப்பில்லை!" – என்றேன் நான்.

"இல்லை. அதற்கு வாய்ப்பு உண்டு. அதனால்தான் உங்களுடன் தொடர்பு கொள்கின்றேன்" என இழுத்தார் அவர். எனக்கு அவரின் இழுப்பு விளங்கவில்லை.

"இல்லை. இந்த விடயத்தில் சுமந்திரன் மிக உறுதியாக இருக்கின்றார். நான் சொல்லி அவர் அந்த உறுதிப்பாட்டில் இருந்து விலக மாட்டார்!" – என்றே நான். அவர் குறுக்கிட்டார்.

"ஆனால் இரண்டு விடயங்கள். முதலாவது – நீங்கள் சுமந்திரன், சிறிதரன் இரண்டு பேருக்கும் நண்பர் தானே. அதுதான் உம்முடன் பேசுகின்றேன்." – என்றார் அந்தப் பெரியவர்.

"ஆம். இருவரும் நண்பர்கள்தான். எனினும் இருவருடனும் அடிக்கடி சண்டை பிடிப்பதும், மோதுவதும் உண்டு. ஆயினும் இருவருடனும் இப்போது நட்பு அத்தியாயம்தான் ஓடிக்கொண்டிருக்கின்றது." என நான் சிரித்தபடி கூறினேன்.

"சரி. அப்படியானால் அடுத்த விடயத்துக்கு வருகிறேன். நீர்தான் அதைக் கையாள வேண்டும்" – என்று சரியான பீடிகை போட்டார் அவர்.

"என்ன?" – என்று விடயத்தை வினவினேன்.

"மாவட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்படவில்லையாயின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு வரமாட்டேன் என்று சுமந்திரன்தானே பிடிவாதம் பிடிக்கிறார்...? அவர் பிடிக்கட்டும். ஆனால் மாவட்டத்தில் வென்று விட்டு, தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு வரமாட்டேன் என்று சிறிதரன் பிடிவாதம் பிடிக்கவில்லையே....!" என்றார் அவர்.

எனக்கு முதலில் அவரின் கருத்து விளங்கவில்லை. 'மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் ஏன் முடிச்சு போடுகின்றார்?' – என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் அவர் விளங்கப்படுத்தினார்.

"இன்றைய கட்டத்தில் நாடாளுமன்றத்தில் சுமந்திரனின் அவசியம் சிறிதரனுக்கும் தெரியும். மாவட்டத்தில் வென்ற சிறிதரன் அதை ராஜினாமாச் செய்துவிட்டு தேசிய பட்டியல் மூலம் எம். பியாகட்டும். சிறிதரன் மாவட்டத்தில் ராஜினாமா செய்தால் அடுத்த இடத்தில் சுமந்திரன் எம். பியாகத்தானே வேண்டும்? அதை அவர் மறுக்க முடியாது. இருவருமே எம்.பியாகட்டும். இந்த நல்ல நடவடிக்கை மூலம் சுமந்திரனைத் தனது செயற்பாட்டினாலும் வென்று, சிறிதரன் தமது கட்சித் தலைமையை இலகுவாகவும் உறுதியாகவும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இருவருக்கும் இடையில் நல்லிணக்கம் நிரந்தரமாக ஏற்படும்." – என்று அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் இரண்டொரு விடயங்களையும் தொட்டார். இந்தத் தேர்தலின் பின்னர் தமிழரசு தலைமைக்கு மட்டக்களப்பில் இருந்தும் வலிமையான உரிமைக்குரல் வர வாய்ப்பு உண்டு, அதை தடுத்து, சில வருடங்களுக்குத் தாமதப்படுத்துவதற்கு சுமந்திரனின் பங்களிப்பு அவசியம். எல்லாம் தாண்டி சுமந்திரன் – சிறிதரன் உறவு மீண்டும் பலமடைவதற்கு இந்த நகர்வு முயற்சி நல்ல யோசனை. ஏதேனும் பண்ணுங்கள்...!" – என்றார் அந்த லண்டன் வாசி.

இது விடயத்தில் என் இயலாமையைச் சுட்டி காட்டினேன். ஆயினும் இந்த விடயத்தைப் பத்திரிகையில் வெளிப்படுத்துவதன் மூலம் வேறு யாரேனும் சமரசம் முயற்சிகளை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புத் தர முடியுமா என்று பார்க்கிறேன் என அவரிடம் குறிப்பிட்டேன். அதற்கேற்ப இன்று அந்த செய்தியை என் பத்தியில் தந்துள்ளேன். தொடர்வோர்கள் சமரசத்திற்கு தொடரலாம்.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

"தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கடந்த எழுபது ஆண்டு கால அரசியல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர்கொண்ட தமிழினம் பல்வேறு விதமான இழப்புகளையும், நெருக்கடிகளையும், வலிகளையும், வாழ்வியல் சுமைகளையும் எதிர்கொண்டு வருகின்றது. ஆனால் 2009க்கு பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவிக்கின்றது.

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைத் தொடர்ச்சியாக வன்வலு கடந்த மென்வலுவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதனை எதிர்கொள்வதே பாரிய சவாலாக உள்ளது. அதிலும் பிரிந்து நின்று எதிர்கொள்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று. ஆகவே ஒன்றாக இணைந்து அரசின் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தமிழ்க் கட்சிகளின் பதவி சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு, பல அணிகளாகப் பிரிவடைந்துள்ளனர். அவர்களுக்கு இடையிலான முரண்பாடு பொது எதிரியை மகிழ்விக்கும். இந்தத் தேர்தல் களம் தமிழ்க் கட்சிகள் தமது முரண்பாட்டையே பேசு பொருளாக்கின.

இதனால் வெறுப்படைந்த பொதுமக்கள் தமிழ்த் தேசியக் கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

தமிழ்க் கட்சிகளிலும் பல்வேறு விதமான தவறுகளும், குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரே இலக்கில் செயற்பட முனைவோர்கள் பிரிந்திருந்ததனால் வடக்கு மாகாண தேர்தல் களம் பல்வேறு விதமான சோதனைகளை

ஏற்படுத்தியிருக்கின்றது. கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டமையால் தம்மைத் தற்காத்துக் கொண்டனர். அவர்களுக்கு எமது பாராட்டுக்களும், வாழ்த்துகளும்.

ஆனால், வடக்கில் உள்ள நிலைமை மிக மோசமாகிவிட்டது. ஆளும் அரசே வெற்றி பெற்றிருப்பதனால் எமது தமிழ்த் தேசியவாத அபிலாஷைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகின்றோம் என்கின்ற கேள்வி எழுகின்றது.

எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்தபட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஆகும்.

இவ்வாறான ஐக்கியமில்லாவிட்டால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக்கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய்விடும்.

ஆகவே, எதிர்காலத்தில் நடைபெறுகின்ற தேர்தல்களிலும் சரி, தமிழ்த் தேசிய உரிமை ஜனநாயகப் போராட்ட விடயங்களிலும் சரி, ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதே அவசியமாகும். அதனையே மக்களும் விரும்புகின்றார்கள்.

கடந்த பல வருடங்களாக இவ்வாறான ஐக்கிய முயற்சிகளை ஏற்படுத்தியவர்கள் என்கின்ற வகையிலும் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களியுங்கள் எனக் கோரிக்கை விடுத்ததன் உரிமையிலும் எதிர்வரும் நாள்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட இருக்கின்றோம்.

அதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். ஆளுக்கு ஆள் துரோகிப் பட்டம் வழங்குவதையும், ஒரு கட்சி வந்தால் இன்னொரு கட்சி வரமாட்டேன் எனக் கூறும் வரட்டு வாதங்களையும் அடியோடு மறந்து விடுங்கள் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

நடந்து முடிந்த தேர்தல் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய நீக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதற்குத் தார்மீக பொறுப்பெடுக்க வேண்டியது சகல தமிழ்த் தேசியக்கட்சிகளும் ஆகும். தமது குறைபாடுகளையும், செயல்பாடின்மையும் இனிமேலாவது திருத்திக் கொள்வதற்கு அவை முன் வர வேண்டும்.

ஆனாலும் தமிழ் மக்கள் இன ரீதியான சிந்தனைதுவத்தை மறந்து தேசிய கட்சிக்கு வாக்களித்தமை என்பது மிகவும் வேதனைக்குரிய பரிதாபகரமான நிலைப்பாடு ஆகும். தமிழ் மக்களுக்குப் பிரச்சினை எதுவும் இல்லை எனும் தோற்றப்பாட்டை வெளிப்படுத்திவரும் ஆபத்துண்டு.

அந்த மக்கள் எதிர்வரும் காலத்தில் தங்களுடைய எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏனெனில் தேசிய கட்சிகளுக்குள் கரைந்து போவது என்பது தமிழ்த் தேசிய இருப்பை ஒருபோதும் கூர்மையாக தக்கவைக்க கூடிய கள நிலையை உருவாகாது என்பதனையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, எமது முயற்சிக்கு சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## தோள் கொடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது உத்தியோக பூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து பதிவேற்றம் செய்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியைப் போன்று நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியையும் அமைதியான முறையில் கொண்டாடுமாறு வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி, தேர்தல் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடும் அரசியல் கலாசாரம் என்றும் நிலையானதாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில், "மறுமலர்ச்சி யுகத்தை ஆரம்பிக்கத் தோள் கொடுத்த அனைவருக்கும் நன்றி" என்று ஜனாதிபதி பதிவேற்றம் செய்துள்ளார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் பிரதான பங்காளர்களாகியுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்கு கலாநிதி ஹரிணி அமரசூரிய நன்றி தெரிவித்துள்ளார். தமிழர்களின் நம்பிக்கையைச் சிறந்த முறையில் பாதுகாப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.



# ஜனாதிபதி அநுரகுமார தரப்புக்கு 18 தேசியப் பட்டியல் ஆசனங்கள்

பொதுத் தேர்தலில் கட்சிகள் பெற்றுக்கொண்ட ஆசனங்களின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு 18 தேசியபட்டியல் ஆசனங்கள் கிடைக்பெற்றதையடுத்து அந்த கட்சிக்கு மொத்தமாக 159 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேநேரம் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசியப் பட்டியல் ஊடாக 5 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து அந்தக் கூட்டணிக்கு 40 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துடன் மொத்தமாக 8 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணிக்கு 2 தேசியப்பட்டியல் ஆசனங்களுடன் 5 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு கிடைக்கப்பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாக அந்தக் கட்சிக்கு 3 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

# இலங்கையுடனான நீண்டகால உறவுகளை விரிவுபடுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளோம்

## பாகிஸ்தான் பிரதமர் வாழ்த்து



நாடாளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கட்சி அமோக வெற்றியீட்டியமைக்காக பாக்கிஸ்தான் பிரதமர் ஷெபாஷ் ஷரீப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரவின் தொலைநோக்கு மற்றும் தலைமைத்துவத்தின் மீது இலங்கை மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் நம்பிக்கைக்கு இது ஒரு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரஸ்பர மரியாதை, பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் ஒத்துழைப்பின் நீண்ட வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இலங்கையுடனான தனது நெருக்கமான மற்றும் நீண்டகால உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு பாகிஸ்தான் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் ஷெபாஷ் ஷரீப் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இரு நாட்டு மக்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய மற்றும் நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்த எமது அரசாங்கம் பாகிஸ்தானுடன் தொடர்ந்து பணியாற்றும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்கு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

"தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிட்ட பொதுத் தேர்தலில் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்ட தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். இந்தத் தருணம் தேர்தல் முடிவுகளில் மாத்திரமின்றி, முழு நாட்டினதும் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது."

– இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்துள்ள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தனிப்பட்ட வேறுபாடுகளை விட உண்மையான வேறுபாடுகள் எப்போதுமே அரசியல் சார்ந்தவை என்பதை இந்த தேர்தல் முடிவுகள் எமக்கு நினைவூட்டுகின்றன.

மேலும் இந்த மாற்றமானது மக்கள் பிளவுகளுக்கு அப்பால் செல்ல தயாராக இருப்பதைக் காட்டுகிறது. ஒன்றாக, நீடித்த நம்பிக்கையை உருவாக்கவும் உண்மையான நல்லிணக்கத்தை அடையவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



இந்த புதிய ஐக்கியத்தில் இலங்கை செழிக்கட்டும். மேலும் அனைத்து இலங்கையர்களின் நலனுக்காகவும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சேவையாற்றுவர் என்று நம்புகின்றோம்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

### கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு

# தந்தை கொலை! தாய், மகள் காயம்!!

காலி, தடல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த முகமூடி அணிந்திருந்த நபர் ஒருவர், வீட்டிலிருந்த தந்தையைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதுடன் தாயையும் மகளையும் காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

47 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த 45 வயதுடைய தாயும் 15 வயதுடைய மகளும் சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பிரபல தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாண மாவட்டத்தில் தோல்வியடைந்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கொழும்பு மாவட்டத்தில் தோல்வியடைந்துள்ளார்.

புளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தோல்வியடைந்துள்ளார்.

அத்துடன் கடந்த 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற அங்கஜன் இராமநாதன் இம்முறை தோல்வியடைந்துள்ளார்.

கடந்த முறை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் இம்முறை தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தோல்வியடைந்தார்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இம்முறை பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தோல்வியுற்றதுடன், அவர் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகத் தவறியுள்ளார்.

வன்னி மாவட்டத்தில் கடந்த தடவை ஈ.பி.டி.பி. சார்பாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான குலசிங்கம் திலீபன் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாகக் கடந்த தடவை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இராஜாங்க அமைச்சுப் பதவி வகித்த பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்ததுள்ளார்.

அத்துடன் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டுக் கடந்த முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி இம்முறை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் மட்டக்களப்பில் போட்டியிட்ட கோவிந்தம் கருணாகரன் தோல்வியடைந்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கடந்த முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோர் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கடந்த முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம். வேலுகுமார் இம்முறை காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்துள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."



**- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காலத்தின் கட்டாயம்

காலத்தால் விரைந்து செய்யப்பட வேண்டிய ஒரு பணி குறித்துத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் நேற்று ஒர் அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

தமிழர்களின் மூளை மையம் என்று போற்றப்படும் வடக்கில், தமிழர்களுடைய தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் பிரிந்து நின்று - பிளவு பட்டு - தமக்குள் முரண்பட்டு - மோதுண்டமையால் இந்த பொதுத் தேர்தலில் வட மாகாணத்தில் தனது தனித்துவ வெற்றிப் பயணத்தை தென்னிலங்கைச் சிங்கள - பௌத்த அரசு ஆரம்பித்து இருக்கின்றது.

தமிழர்களின் பாரம்பரிய தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களுடைய தேசியத்தை - தனித்துவத்தை - நிலை நிறுத்தி, நீடிக்கச் செய்வதற்கான முயற்சியில் ஆளும் தரப்பின் இந்த வெற்றி பெரும் பின்னடைவு என்பது மறுக்கப் பட முடியாத உண்மை.

இந்தப் பின்புலத்தில்தான் பிளவுண்டு நிற்கும் தமிழ்த் தேசியத் தரப்புக்களையும் கட்சிகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் - ஐக்கியப்படுத்துவதின் வாயிலாக - தமிழர் தாயகத்தில் தமிழ் தேசியத்தின் இருப்பை நிலைநாட்ட முடியாதா என்ற நப்பாசையுடன் இந்த முயற்சி ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் காலமோ குறுகியது. செய்ய வேண்டிய வேலைகளோ அதிகம் என்பது உண்மை.

மிக விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக்கப் போகின்றன. அதற்கு முன்னர் தமிழ்த் தேசியத் தரப்புகளும் கட்சிகளும் தங்களை ஒன்றிணைத்து, ஒரு குடையின் கீழ் செயல்பட முன் வந்தால் மட்டுமே பொதுத் தேர்தலில் கோட்டை விட்ட தமிழர் தேசியத் தனித்துவத்தை தமிழர்கள் தப்பிப் பிழைக்க வைக்க முடியும்.

2023 இல் நடக்க இருந்த உள்ளூராட்சி சபை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு அடுத்து வரும் மாதங்களில் நடத்தப்பட இருக்கின்றது.

2023 முற்பகுதியில் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டபோது தமிழர் தரப்புக்கள், கட்சிகள் தங்களுக்குள் கன்னை பிரிந்து, அந்தத் தேர்தலை எதிர்கொள்ள வேட்புமனுத் தாக்கல் செய்து தயாராகின என்பது கண்டு கொள்ளப் பட்ட உண்மை.

இப்போது பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவைத் தனக்குரிய சந்தர்ப்பமாகப் பயன் படுத்தி பொதுத்தேர்தலில் வடமாகாணத்தில் அதிக லாபத்தை ஈட்டிக் கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் ஆளுநரப்பு, இனி அறிவிக்கப்படக்கூடிய உள்ளூராட்சி சபை தேர்தல்களிலும் அதே தந்திரோபாய அணுகுமுறையை பின்பற்ற முயலும். அதற்கு இடமளிக்காமல், தமிழர் தரப்புத் தான் இழந்த தமிழ்த் தேசியத்திற்கான ஐக்கியத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து, தங்களை உறுதிப்படுத்திக் கொள்வது மிக முக்கிய - அவசரமான - அவசியமான - காரியமாகும்.

இனிஎந்நேரமும்நடத்தப்படக்கூடிய உள்ளூராட்சி சபைத் தேர்தல் புதிதாக வேட்பு மனு கோரி, அதன் அடிப்படையில் தேர்தல் நடக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. அதற்காக நீதிமன்றத்தின் கதவுகளை தட்டவும் தரப்புகள் தயாராக உள்ளன.

அப்படி புது வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, அவற்றின் அடிப்படையில்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்றால், அதற்கு முன்னர் தமிழர் தரப்புகள் தங்களுக்குள்ளான ஐக்கியத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்கான கால அவகாசம்தான் மிகவும்குறைவாகஉள்ளது. இடைநிறுத்தப் பட்டிருக்கின்ற உள்ளூராட்சி தேர்தலை அடுத்த ஐம்பது நாள்களுக்குள் தேர்தல் ஆணையம் நடத்தி முடிப்பதற்கான சூழல்கள் தென்படுகின்றன.

அதற்கு முன்னர் இந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, புதிய வேட்பு மனுக்களைக் கோரிப் பெற்று, அவற்றின் அடிப்படையில் தேர்தல்களை முன்னெடுக்க நீதிமன்றம் மூலம் உத்தரவிட வைப்பதும்இப்போதைய அவசர - அவசிய - பணியாகும்.

அவற்றைச்செய்து கொண்டு, அடுத்த கட்ட நகர்வுக்கு தமிழர் தரப்பு தயாராக வேண்டும். இது காலத்தின் கட்டாயமும் கூட.

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளால் இலங்கை தமிழர்கள் ஏமாந்துவிட்டனர்

## வைகோ கருத்து



"தமிழர்கள் ஏமாந்துவிட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக இடங்களில் வெற்றி பெற்று இருப்பதால், கொடிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர இலங்கை ஜனாதிபதி திஸநாயக்க முற்படுவார்."

– இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்தபோதே வைகோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

"மிகக் கொடூரமான தமிழினப் படுகொலைக்கு ராஜபக்ஷ அரசு காரணம் என்றாலும், ஈழத் தமிழர் பிரச்சினையில் சிங்கள இனவாத வெறிகொண்ட ஜே.வி.பி. கட்சியினுடைய குரலாக, தமிழர்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு வந்தவர்தான் இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க. அவரது கட்சியான தேசிய மக்கள் சக்தி கட்சி, ஜே.வி.பியினுடைய மறு பதிப்பாகும். தொடக்கத்திலிருந்தே தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற கொலைவெறி நோக்கம் கொண்டவர்தான் திஸநாயக்க.

இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தம் உள்ள 225 தொகுதிகளில், அவரது கட்சி கூட்டணி 159 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறது. தமிழர்கள் ஏமாந்துவிட்டார்கள். 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டபோது, தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடாது என்றும், 13 ஆவது சட்டத் திருத்தத்தை ஏற்கக் கூடாது என்றும் சிங்கள இனவெறியினுடைய கருத்தாக தொடர்ந்து கூறிவந்தவர் திஸநாயக்க. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவரும் அவர்தான்.

சுனாமிப் பேரலை இலங்கையைத் தாக்கியபோது, தமிழர்களுக்கு எந்த நிவாரணமும் கொடுக்கக் கூடாது என்று பகிரங்கமாக கூச்சலிட்டவர்தான் திஸநாயக்க. இந்திய அரசு தொடர்ந்து சிங்கள அரசையே ஆதரித்து வந்திருக்கின்ற நிலையை இனிமேல் மாற்றிக் கொள்ள வேண்டும். சிங்கள இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். சிறையில் அடைபட்டுள்ள தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும். தமிழினப் படுகொலையை நடத்திய சிங்கள அரசு மீது அனைத்துலக நாடுகளின் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இதற்கு முந்தைய ஜனாதிபதிகள் தமிழர்களுக்கு எதிராக கொடும் குற்றங்களை செய்திருந்தாலும், அவர்களைவிட சிங்கள வெறிபிடித்தவர்தான் இன்றைய ஜனாதிபதி. நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக இடங்களில் வெற்றி பெற்று இருப்பதால், கொடிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர அவர் முற்படுவார். சிங்கள அரசோடு மிகுந்த அக்கறையோடு உறவு கொண்டுள்ள இந்திய மோடி அரசு, இனிமேலாவது ஜெனிவா மனித உரிமைக் கவுன்சிலில் சிங்கள ஆதரவு நிலையை எடுக்கக் கூடாது.

ஒரு லட்சத்து 37 ஆயிரம் ஈழத் தமிழர்களை படுகொலை செய்த சிங்கள அரசு, ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்களை நாசமாக்கி, அவர்களது உயிர்களையும் பறித்த சிங்கள அரசு சர்வதேச நீதிமன்றக் குற்றக்கூண்டில் நிறுத்தப்படுகிற வரை, சுயநிர்ணய உரிமைக்காக பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தாய்த் தமிழகத்துத் தமிழர்களும், உலகவாழ் தமிழர்களும் பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கும், பன்னாட்டு நீதி விசாரணை நடத்துவதற்கும் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டும் அழுத்தம் தர வேண்டும்.

தமிழர்கள் சிந்திய ரத்தத்தையும், உயிர்ப்பலியையும், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்ததோடு, தீக்குளித்து உயிர்களையும் தந்த தியாகத்தை ஒருபோதும் நாம் மறந்துவிடக் கூடாது. தமிழீழத்தில் 90 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். பாலஸ்தீனத்துக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் இந்திய அரசும், ஏனைய நாடுகளின் அரசுகளும் ஈழத்தமிழர் பிரச்சினையில் மட்டும் துரோகம் செய்வது ஏன்?

தமிழ்நாட்டுத் தமிழர்களும், உலகவாழ் புலம்பெயர் தமிழர்களும் நம் இனத்தைக் காப்பாற்ற ஒன்றுபட்டு உலக அரங்கில் குரல் எழுப்ப வேண்டும். இந்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு துரோகம் செய்யக் கூடாது. ஈழத்தமிழர் பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. அந்த உணர்வோடு தொடர்ந்து நாம் தமிழீழத்தை ஆதரிக்க வேண்டும்," என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமர் மோடி பயணிக்க இருந்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு

பிரதமர் நரேந்திர மோடி பயணிக்க இருந்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதை, அடுத்து அவர் தியோகர் விமான நிலையத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக காத்திருந்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பழங்குடியின தலைவர் பிர்சா முண்டாவின் 150 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, பிஹாரின் ஜமுய் நகரில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த நகரம் ஜார்க்கண்டின் தியோகர் நகரில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஜமுய் நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு தியோகர் விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி வருகை தந்தபோது அவர் பயணம் செய்ய இருந்த சிறப்பு விமானத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் செல்லும் வரை அந்த பிராந்தியத்தின் வான்வெளியில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





## புதிய சட்டமூலத்துக்கு எதிர்ப்பு:

# பாடல் மூலம் நியூஸிலாந்து அவையை அதிரவைத்த பெண் எம்.பி. ஹானா

நியூஸிலாந்தின் மவோரி பழங்குடிகளுக்கும் பிரிட்டன் அரசுக்கும் இடையேயான பாரம்பரிய ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பழங்குடியின பெண் எம்.பி. ஹானா தலைமையில் மவோரி எம்.பி.க்கள் பாரம்பரிய பாடல், நடனம் மூலம் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அவர்களின் பழங்குடியினப் பாடலும், அதற்கேற்ற ஆவேச நடனமும் நியூஸிலாந்து நாடாளுமன்றத்தை அதிரவைத்தது. அவர்களின் உரிமைப் பாடலை செய்வதறியாது கவனித்துவந்த சபாநாயகர் பின்னர் மவோரி எம்.பி.க்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டார்.

முன்னதாக, 1840 இல் பிரிட்டன் அரச பிரதிநிதிகளுக்கும், நியூஸிலாந்தின் வடக்குத் தீவில் இருக்கும் பூர்வக்குடிகளாக அறியப்படும் மாவோரி தலைவர்களுக்கும் இடையே ‘வைதாங்கி ஒப்பந்தம்’ (Treaty of Waitangi) மேற்கொள்ளப்பட்டது. இதில் மாவோரி பூர்வக்குடிகளுக்கு சில சலுகைகளும், உரிமைகளையும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் மாற்றம் செய்ய நியூஸிலாந்து நாடாளுமன்றத்தில் அண்மையில் ஒரு சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டமூலம் டி பாடி மவோரி (Te Pati Maori) கட்சி எம்.பி.,க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். முதலில் இளம் எம்.பி. ஹானா பழங்குடி பாடலுடன் சட்டமூலம் நகலை கிழித்தெறிந்து அவையின் நடுவே வந்து போராட்ட முழக்கம் எழுப்ப அவருடன் பிற மவோரி எம்.பி.க்களும் இணைந்து கொண்டனர்.

அவர்களின் பழங்குடியினப் பாடலும், அதற்கேற்ற ஆவேச நடனமும் நியூஸிலாந்து நாடாளுமன்றத்தை அதிரவைத்தது. அவர்களின் உரிமைப் பாடலை செய்வதறியாது கவனித்து வந்த சபாநாயகர் பின்னர் மவோரி எம்.பி.க்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டார்.

நியூஸிலாந்தில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்த 54 ஆவது நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தேசிய கட்சியினர் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தனர். இதனிடையே, அங்குள்ள டி பாடி மவோரி கட்சியைச் சேர்ந்த 6 பேர் எம்.பி.களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க் ஒருவர். 21 வயதேயான இவர் கடந்த 1853 இலிருந்து நியூஸிலாந்து வரலாற்றில் மிக இளம் வயதில் எம்.பி. ஆனவர் என்ற பெருமையை பெற்றவராவார்.

ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க்கின் முதல் நாடாளுமன்ற உரை அவரை உலகம் முழுவதும் கொண்டு சேர்த்தது. தனது பேச்சினுடே மவோரி இனத்தின் போர் பாடலைப் பாடி நாடாளுமன்றத்தை அதிர வைத்தார்.







# ஐ.நாவுக்கான ஈரான் தூதருடன் எலான் மஸ்க் இரகசிய சந்திப்பு

மத்திய கிழக்கில் பதற்றம் நிலவி வரும் சூழலில், நியு யோர்க்கில் ஐ.நாவுக்கான ஈரான் தூதரை, ட்ரம்ப் அரசின் செயல்திறன் நிறுவனத்தின் இணை இயக்குநரான எலான் மஸ்க் ரகசியமாக சந்தித்துள்ளார்.

அமெரிக்கா– ஈரான் இடையிலான பதற்றத்தை தணிப் பதற்கான நடவடிக்கைகள் குறித்து இதன்போது விவாதிக் கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய கிழக்கில் போர் பதற்றம் நிலவி வரும் சூழ லில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்துள்ளது. அதில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இச்சூழலில், இஸ்ரேல் – ஈரான் இடையே போர் எப்போது வேண்டுமானா லும் முழுவீச்சில் மூளும் என்பதால், சர்வதேச நாடுகளே அச்சத்தில்தான் உள்ளன.

இந்த நிலையில், ஐ.நாவுக்கான ஈரான் தூதர் அமீர் சயீத் இரவானி, எலான் மஸ்க் ஆகிய இருவரும் நியூயோர்க்கில் இரகசியமாக சந்தித்துள்ளனர். அவர்கள் இருவரும் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் என தெரிகிறது. இரு தரப்புக்கும் இடையே நடந்த இந்தச் சந்திப்பு நேர்மறையானதாக இருந்ததாகவே சொல்லப்படுகி றது.

கடந்த வாரம் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள ட்ரம்புடன் நடந்த தொலைபேசி வாயிலான உரையாடலின் போது மஸ்க்கும் உடன் இருந்ததாக தகவல்கள் வெளியாகின. இதையடுத்து ட்ரம்ப் அரசின் செயல்திறன் நிறுவனத்தின் இணை இயக்கு நராக மஸ்க் நியமிக்கப்பட்டார். இவ்வாறு அனைத்து விஷ யங்களிலும் எலான் மஸ்க் முக்கிய பங்கு வகித்து வருகி றார்.

டொனால்ட் ட்ரம்ப் தனது முதல் ஆட்சிக் காலத்தின் போது 2015 ஆம் ஆண்டில் ஈரானுக்கு உலகில் உள்ள மற்ற வல்லரசு நாடுகளுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றினார். மேலும், ஈரானுக்கான எண்ணெய் வருவாய் மற்றும் சர்வ தேச பணப்பரிவர்த்தனைக்கான தடைகளையும் விதித்தார். அதோடு ஈரானின் உயர்மட்ட ஜெனரல் காசிம் சுலைமானியை 2020 இல் ஈராக்கில் படுகொலை செய்யவும் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டார் எனக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து 'டொனால்ட் ட்ரம்ப் உலகின் முதன் மையான தீவிரவாதி' என்று குறிப்பிட்டு அவரைக் கொல்ல ஈரான் உத்தரவிட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ட்ரம்ப் முதலில் இருந்தே ஈரானுடன் மோதல் போக்கையே கடை பிடித்து வந்தார். அண்மையில், ட்ரம்ப் மீது கொலை முயற் சிக்கான சதித் திட்டத்தில் ஈரானுக்கு தொடர்பு இருப்பதாக வும் கூறப்பட்டது. ஆனால், இந்த முறை ட்ரம்பின் அணுகு முறையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதன் வெளிப்பாடகவே மஸ்க் – ஈரான் தூதர் சந்திப்பு நிகழ்ந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. ட்ரம்ப், தேர்தல் பிரச்சாரங்களில் மத்திய கிழக்கில் தன்னால் மட்டுமே அமைதியைக் கொண்டு வர முடியும் என்று கூறியிருந் தார்.

ஐ.நா.வுக்கான ஈரான் தூதர் அமீர் சயீத் இரவானி, எலான் மஸ்கிடம், ஈரான் மீது விதிக்கப்பட்ட தடைகளுக்கு விதிவி லக்கு அளிக்க வேண்டும். அமெரிக்காவில் உள்ள வணிக நிறுவனங்கள் ஈரானில் வந்து வணிகத்தில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுகொண்டார் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த சந்திப்பு குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவிக்க மாட் டோம் என ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரானின் தூதுக் குழு தெரிவித்துள்ளது.







# நாடாளுமன்றத்தில் சுமந்திரன், டக்ளஸின் குரல் மௌனிக்கப்பட்டமை வருந்தத்தக்கது

## கீதநாத் காசிலிங்கம் கரிசனை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட மூத்த தமிழ் தலைவர்கள் இம்முறை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காமல் இருப்பது தமிழர்களுக்கான தீர்வுப் பயணத்தில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தும் என சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வடக்கு மாகாண பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இத்தன்போது மேலும் தெரிவித்த அவர் –




இந்த விடயம் தொடர்பாக பல தலைவர்கள் தேசியக் கட்சிகளில் இருந்து கொண்டு பேச முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

தமிழர்களின் நுணுக்கமான பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் இனப்பிரச்சின சார்ந்த விவகாரங்களைப் பேசுவதற்கு அவர்களது குரல் நாடாளுமன்றத்தில் மௌனிக்கப்பட்டமை மிகவும் வருந்தத்தக்கது. – என அவர் சுட்டிக்காட்டினார்.

# அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று விஜித ஹேரத் சாதனை படைத்தார்



இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித ஹேரத் வெற்றி பெற்று மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

அதற்கமைய, கம்பஹா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட விஜித ஹேரத் 716,715 வாக்குகளையும், அனில் ஜயரத்ன பெர்னாண்டோ 1 62, 433 வாக்குகளையும், மஹிந்த ஜயசிங்க 137, 315 வாக்குகளையும், எச் டி கிறிசாந்த சில்வா அபேசேன 121, 825 வாக்குகளையும், எம்.எம் மொஹமட் முனீர் 109,815 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஆர்.ஏ அசோக சப்புமல் ரன்வல 109,332 வாக்குகளையும், என்.டி விஜேசிங்க 83,061 வாக்குகளையும், ருவன் நிஷாந்த மாபா கம 78,623 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட ஹர்சன ராஜகருணா 67,004 வாக்குகளையும், காவிந்த ஜயவர்தன 37,597 வாக்குகளையும், அமில பிரசாத் 23,699 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் ஹரிணி அமரசூரிய இம்முறை அதிக வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

அவர் 655,289 வாக்குகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் அதிக விருப்பு வாக்குகளை மஹிந்த ராஜபக்ஷ பெற்றிருந்தார்.

அவர் 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 527,364 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

# பெருவெற்றியால் ஏற்படக் கூடிய ஆபத்து நிலை!



## அநுரவை எச்சரிக்கும் சாலிய பீரிஸ்



நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கிட்டிய பெரும் வெற்றியால் வரப் போகும் ஆபத்துக்கள் குறித்து ஜனாதிபதி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஒரு கட்சி தனித்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

2010 இல் மஹிந்த அரசாங்கமும் 2020 இல் பொதுஜன பெரமுனவும் மூன்றில் இரண்டை நெருங்கி சென்றன. அத்துடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற சில எதிர்க் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டியிருந்தது.

1994 ஆம் ஆண்டு பிரதமர் சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் இந்த வெற்றிக்கான ஒரே சமாந்தரமாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் தேசிய மக்கள் சக்தி கணிசமான வெற்றிகளைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இலங்கையில் உள்ள பலதரப்பட்ட சமூகங்களை ஒன்றிணைக்கக் கூடிய தலைவராக ஜனாதிபதி இருக்க முடியும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் வாக்குறுதியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவாக நிறைவேற்றுவதற்கு இந்த முடிவு வழி வகுக்கும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாட்டின் திசையில், குறிப்பாக அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து பெரும்பாலான மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்பதற்கு இந்த மாபெரும் வெற்றி ஒரு சான்றாகும்.

ஜனாதிபதியே கூறியது போல் கடந்த காலங்களில் அரசியல் சக்திகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் சட்டங்களை இயற்றினர். எனவே, ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை சிதைக்கும் சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை இயற்றுவதற்கான சோதனையை தேசிய மக்கள் சக்தி எதிர்க்க வேண்டும்.

பொருளாதாரத்தை மேம்படுத்தவும், மக்களின் வாழ்க்கையை உயர்த்தவும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், ஊழலைச் சமாளிக்கவும், தேசிய நல்லிணக்கப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அரசமைப்பு சீர்திருத்தத்தை இயற்றவும், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் எதிர்பார்க்கும் வாக்காளர்களின் அசாதாரண எதிர்பார்ப்புகளை புதிய ஆட்சி நிர்வகிக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி தலைமையானது அதன் புதிய மற்றும் ஒப்பீட்டளவில் அனுபவமற்ற எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்கள் உடன் கட்சி இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கை நிலைகளில் இருந்து விலகிச் செல்லாமல் இருப்பதையும் அவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மக்கள் தங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை மீறாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

மக்களால் அதிக பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கடந்த கால அரசாங்கங்களின் தலைவிதியை தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. - என்றார்.

# ஜனாதிபதியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்

பொதுத் தேர்தலில் விசேட வெற்றியை பதிவு செய்துள்ள தேசிய மக்கள் சக்திக்கு வாழ்த்துதெரிவிப்பதற்காக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவைச் சந்தித்துள்ளார்.



அருகிலுள்ளஜனநாயகநாடாகதேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள ஆணைக்காக இந்தியா வாழ்த்து தெரிவிப்பதுடன் இருநாட்டு மக்களின் நலனுக்காக இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.




# மட்டக்களப்பில் சமூகவிரோதிகளை அடியோடு நிராகரித்த தமிழ் மக்கள்!



22 தேர்தல் மாவட்டங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தான் தேசிய மக்கள் சக்தி தோல்வி கண்டுள்ளது, இது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இலங்கைத் தமிழரசு கட்சியின் ஒவ்வொரு ஆதரவாளரின் வெற்றியாகும் என மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியானதை தொடர்ந்து, அந்த பகுதியில் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஒன்று திரண்டு, வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்து மகிழ்சி தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் சாணக்கியன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

“ 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசு கட்சி சார்பில் தனித்துவமாக போட்டியிட்டு சிறந்த மூன்று வேட்பாளர்கள் அமோகமான வெற்றி பெற்றுள்ளனர்.

மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு தமிழரசுகட்சி ஓர் ஆசனத்தில் இருந்து இன்று 3 ஆசனங்களைப் பெற்று எங்கள் கட்சியின் வாக்கு வங்கியை அதிகரித்துள்ளோம். அதேவேளை 22 தேர்தல் மாவட்டங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும்தான் தேசிய மக்கள் சக்தி தோல்வி கண்டுள்ளது.

இதனை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் ஒவ்வொரு ஆதரவாளனின் வெற்றியாகத்தான் பார்கின்றேன்.

அதேநேரத்தில் மாவட்டத்தில் கடந்த காலத்தில் சமூக விரோத செயற்பாட்டில் ஈடுபட்ட அனைவரையும் தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர்.

இது ஆரம்பம் மட்டும்தான் . வடக்கு கிழக்கிலே இம்முறை இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் தமிழ் மக்களின் பிரதானமான கட்சியாக தெரிவாகியுள்ளது.

5 தேர்தல் மாவட்டத்தில் ஆசனம் கிடைத்த ஒரே ஒரு கட்சி தமிழரசு கட்சி .அந்த வகையில் தொடர்ச்சியாக தமிழரசு கட்சி தமிழ் மக்களின் குரலாக தமிழ் மக்களின் பிரதான கட்சியாக இயங்கிகொள்ளும்.

தமிழரசு கட்சி மிக முக்கியயமாக முன்வைக்கும் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு, மற்றும் தமிழ் மக்கள் மீது நடந்த இனழிப்பு தொடர்பாக நீதி வேண்டும் கோரிக்கை. அதேவேளை எங்களுடைய நில அபகரிப்பு, காணி அபகிப்பு நிறுத்தப்படவேண்டும். தமிழ் மக்களுடைய பிரதேசத்தில் அபிவிருத்தி நடக்க வேண்டும்.

இந்த நான்கு விடங்களுக்கும் முக்கியமாக தமிழரசு கட்சி மக்களோடு மக்களாக நின்று அடுத்து 5 வருடங்களில் உழைக்கும் என்ற செய்தியை மட்டக்களப்பில் இருந்து உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு செல்லிவைக்கின்றேன் ” என்றார்.

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட இலங்கை தமிழரசுகட்சி 96,975 வாக்குளை பெற்று மூன்று பிரதி நிதிகளை பெற்றுக் கொண்டது.

இதில் இராசமாணிக்கம் சாணக்கியன் 65,458 விருப்பு வாக்குகளையும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் 22,773 வாக்குகளையும், வைத்தியர் இளையதம்பி சிறிநாத் 21,202 விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரா. சாணக்கியன் 65,468 விருப்பு வாக்குகளைப் பெற்று மட்டக்களப்பின் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளார், இது மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றில் ஒரு வேட்பாளர் பெற்ற மிக அதிகூடிய விருப்பு வாக்காகவும் காணப்படுகின்றது.

முன்பு பெற்ற 57,000 வாக்குகளை விட இதுவே அதிகமாகும். இரண்டாவது இடத்தில் இருக்கும் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் 22,773 வாக்குகளையே பெற்றுள்ளார்.

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வெற்றி வேட்பாளர் சிறிதரன் அஞ்சலி!

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வெற்றி வேட்பாளரான சிவஞானம் சிறீதரன், உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, தமிழ்த்தேசியப் பயணத்தின் ஆத்ம வழிகாட்டிகளான மாவீரர்களுக்கு கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று அஞ்சலி செலுத்தினார். அப்போது எடுக்கப்பட்ட படங்க இவை.












# முள்ளிவாய்க்காலில் ரவிகரன் அஞ்சலி




நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள துரைராசா ரவிகரனுக்கு முல்லைத்தீவு மக்களால் நேற்று அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரில் உயிரிழந்த மக்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு நேற்றுக் காலை 11.15 மணியளவில் சென்று அவர் வணக்கம் செலுத்தியிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வன்னி தேர்தல் மாவட்டத்தில் துறைராசா ரவிகரன்,11,215 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வரவேற்பு நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.11.2024




சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டிருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்படாமல் தடுக்க நீங்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.




இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப்புணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக்கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக்குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.




இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சௌகரியங்களை அனுபவிக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மன வலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்திற்காக சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே திட்டமிட்டுப் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்யுங்கள்.




கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில்பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் தாயின் உடல் நிலையில் பாதிப்பு காணப்படும். அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.11.2024




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதை தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.

உங்களிடம் காணப்படும் மன திருப்தி மற்றும் மகிழ்ச்சி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று தேவையில்லாமல் வாக்கு வாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். கடவுள் ஆசி இன்று உங்கள் பக்கம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park